



மதுரை மாவட்டம் திருப்பாலை இ.எம்.ஜி யாதவா கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் “உலகம் உங்கள் கையில்” திட்டத்தின் கீழ் 792 கல்லூரி மாணவிகளுக்கு மடிக்கணினிகளை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், முன்னாள் மண்டல தலைவர் வாசுகி சசிகுமார், மாமன்ற உறுப்பினர்கள் சசிகுமார், திருப்பாலை ராமமூர்த்தி, பாபு, செல்வகணபதி, பால்செல்வி பாலகிருஷ்ணன் உள்ளிட்ட கல்லூரி நிர்வாகத்தினர், அரசு அதிகாரிகள், கழகத்தினர், மாணவிகள் என திரளானோர் பங்கேற்றனர்.

### தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்க மாநிலத் தலைவர்

# எஸ்.கிருபாகரன் உட்பட 200 பேர் கழகக் கூட்டணிக்கு ஆதரவு!

## அமைச்சர் ஐ.பெரியசாமியைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்!

திண்டுக்கல், ஜன.31

தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் மாநில நிறுவன தலைவர் எஸ்.கிருபாகரன் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமியைச் சந்தித்து கழக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியைச் சேர்ந்த எஸ். கிருபாகரன் தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தை வரும் மார்ச் ஒன்றாம் தேதி துவக்க உள்ளார்.

சின்னாளப்பட்டி பாலாஜி மகாலில் நடைபெறும் கட்சியின் துவக்க விழாவில் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தருமாறு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ. பெரியசாமியை நேரில் சந்தித்து அழைப்பிதழ் வழங்கி சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார். அவருடன் வந்த சுமார் 200 இளைஞர்கள் அமைச்சரிடம் வாழ்த்துப் பெற்றனர்.

அமைச்சர் ஐ.பெரியசாமி கிருபாகரனுக்கு வாழ்த்து தெரிவித்தார். தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கம் மாநில நிறுவனத் தலைவர் எஸ்.கிருபாகரன் கூறுகையில். ஆத்தூர் தொகுதி பொறுத்தவரை தொகுதிக்கு தேவைப்பட்ட அத்தனைத் திட்டங்களையும் நிறைவேற்றி உள்ளார். முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தலின் போது அறிவிக்கப்பட்ட அத்தனை கோரிக்கைகளையும் நிறைவேற்றி உள்ளார். தமிழ்நாடு மக்கள் அவரின் பக்கமே நிற்கின்றனர். சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைவர் அணி மிகச் சிறப்பான வெற்றியைப் பெற்று மீண்டும் தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமில்லை என்றார்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சாணார்பட்டி விஜயன், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணி, மாவட்டத் தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் கிழக்கு பகுதிச் செயலாளர் ராஜேந்திரகுமார், பேரூராட்சி மன்றத் தலைவர் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால் என்ற மணி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண் ஜெகநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னாள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் செல்வி காங்யேகன், சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் செல்வம் திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர், நெல்லை சுபாஷ், நகர சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் என்.நஜீப் உட்பட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

தன்னரசு மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் மாநில நிறுவன தலைவர் எஸ். கிருபாகரன் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி சந்தித்தார்.கட்சியின் . அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் கோவை – மதுரை நகரங்களுக்கு

# மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி நிராகரித்தது ஏன்?

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜன.31–

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களுக்கான மெட்ரோ ரயில் திட்ட முன்மொழிவுகளை ஒன்றிய அரசு ஏன் நிராகரித்தது என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

கதிர் ஆனந்த் கேள்வி வருமாறு:–

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களுக்கான மெட்ரோ ரயில் திட்ட முன்மொழிவுகளை ஒன்றிய அரசு நிராகரித்துள்ளதா? அப்படியானால், அதற்கான காரணங்களுடன் அதன் விவரங்கள் தருக?



இன்று வரை நாட்டில் உள்ள நகரங்களில் அங்கீகரிக்கப்பட்ட மெட்ரோ ரயில் திட்டங்களின் முழுமையான பட்டியல், அந்தந்த நகரங்களின் மக்கள் தொகை மற்றும் ஒவ்வொரு திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவும் இடம் வாரியாக தெரிவிக்கவும்.

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் டோகன் சாஹூ எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:--

தமிழ்நாடு அரசால் சமர்ப்பிக்கப்பட்ட கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் மெட்ரோ திட்டங்களுக்கான முன்மொழிவுகளை மத்திய அரசு ஆய்வு செய்து, மாநில அரசுக்கு அவதானிப்புகளை தெரிவித்தது.

**கோயம்புத்தூர்**

குறைந்த சராசரி பயண நீளம் மற்றும் சாலையில் இருக்கும் சராசரி வேகம், மிகக் குறைவான நேரச் சேமிப்பு காரணமாக மெட்ரோ அமைப்பிற்கு மாதிரி மாற்றம் எதிர்பார்க்கப்படவில்லை.

கோயம்புத்தூர் முனிசிபல் கார்ப்பரேஷன் (சிஎம்சி) பகுதிக்கு கூடுதலாக, உள்ளூர் திட்டமிடல் பகுதியின் (எல்பிஏ) மக்கள்தொகை மெட்ரோ முறையில் சேவை செய்ய எடுக்கப்பட்டுள்ளது. சிஎம்சி பகுதியை விட 5 மடங்கு பெரிய எல்பிஏவில் வசிக்கும் மக்கள் முன்மொழியப்பட்ட மெட்ரோ அமைப்பைப் பயன்படுத்துவது கடினம்.

கோயம்புத்தூர் மெட்ரோவின் 34 கிலோமீட்டர் நீளமுள்ள நெட்வொர்க்கிற்கு ஒரு நாளைக்கு 5.9 லட்சம் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது, இது அதிக மக்கள்தொகைக்கு சேவை செய்யும் சென்னை மெட்ரோ கட்டம்-1 இன் 54.10 கிமீ செயல்பாட்டு நெட்வொர்க்கில் ஒரு நாளைக்கு 4 லட்சம் பயணிகளின் உண்மையான எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அதிகமாக உள்ளது. எனவே, DPR இல் திட்டமிடப்பட்ட ரைடர்ஷிப் புள்ளி விவரங்கள் யதார்த்தமானவை அல்ல.

பல இடங்களில், போதிய ரைட் ஆஃப் வே (RoW) இல்லாததால், நிலையத்தை உருவாக்குவது சாத்தியமில்லை.

**மதுரை**

GoTN சமர்பித்த விரிவான மொபிலிட்டி திட்டத்தில் (CMP) தற்போதைய பயணிகளின் எண்ணிக்கையானது பேருந்து விரைவான போக்குவரத்து அமைப்புக்கு (BRTS) நியாயமானது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றுவரை நாட்டில் உள்ள நகரங்களில் அங்கீகரிக்கப்பட்ட மெட்ரோ ரயில் திட்டங்களின் முழுமையான பட்டியல், அந்தந்த நகரங்களின் மக்கள்தொகை மற்றும் ஒவ்வொரு திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவும் இடம் வாரியான விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இந்தியாவில் பாட்னா, சூரத், கொச்சி, இந்தூர், போபால், நாக்பூர்-தானே- மும்பை, ஆக்ரா, லக்னோ, கான்பூர், நொய்டா-கிரேட்டர் நொய்டா ஆகிய இரண்டாம் கட்ட நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### கேரள மாநில தி.மு.க. முன்னாள் பொருளாளர்

# வடக்கந்தரை பிரேமன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.31–

கேரள மாநில, தி.மு.க. முன்னாள் பொருளாளர் பிரேமன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்தில் உள்ள வடக்கந்தரையைச் சேர்ந்த கேரள மாநில தி.மு.க. முன்னாள் பொருளாளர் திரு.பிரேமன் (வயது 83) அவர்கள் வயது மூப்பின் காரணமாக மறைவெய்தினார் என்ற செய்தி அறிந்து வேதனையடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், கேரள மாநில கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர்

# பி.டி.உஷாவின் கணவர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 31–

**இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான பி.டி.உஷா அவர்களின் கணவர் சீனிவாசன் அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான பி.டி. உஷா அவர்களின் கணவர் சீனிவாசன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

தங்களின் அன்புக்குரியவரை இழந்து தவிக்கும் பி.டி.உஷா அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது இதயப்பூர்வமான இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### சட்டமன்றத் தேர்தலில் கழகத்திற்கு 45% வாக்குகள் கிடைக்கும் என்பதே கூட மிகக் குறைவான கணிப்புதான் என்பதை

# திராவிட மாடல் ஆட்சி 2.0 விற்கு மகுடம் சூட்டப் போகும் பெண்கள் நிரூபிப்பார்கள்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு உறுதி!

சென்னை, ஜன. 31–


45% வாக்குகளுடன் தொட முடியாத முதலிடத்தில் தி.மு.க. கூட்டணி உள்ளது என இந்தியா டுடே – சிவோட்டர்ஸ் சர்வே வெளிப்படுத்தியுள்ளது என்று பெண்களின் இதயங்களை வெல்லும் போட்டியில், தி.மு.க. முன்னணி என டெக்கான் க்ரானிக்கலின் கணிப்பு வெளியாகியுள்ளது என்றும் 45% என்பதே கூட மிகக் குறைவான கணிப்புதான் என்பதை திராவிட மாடல் 2.0விற்கு மகுடம் சூட்ட போகும் பெண்கள் நிரூபிப்பார்கள் என்றும் கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:–

சட்டமன்றத் தேர்தல் குறித்து நிகழ்த்தப்படும் ஒவ்வொரு ஆய்வும், கருத்துக் கணிப்புகளும் திராவிட மாடல் ஆட்சியை மீண்டும் நிறுவ மக்கள் உறுதியெடுத்துவிட்டதை காட்டுகின்றன. நேற்று டெக்கான் க்ரானிகல் பத்திரிகை எழுதியிருந்த ஆய்வு கட்டுரையும், இந்தியா டுடே வெளியிட்ட கருத்துக் கணிப்பும் அதனை மெய்ப் பிக்கின்றன.

‘பெண்களின் இதயங்களை வெல்லும் போட்டியில், திமுக முன்னணியில் உள்ளது’ (In race to win hearts of women, DMK is ahead a) என தலைப்பிட்டு டெக்கான் க்ரானிகல் கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அதில், சிறுபான்மையினர் மத்தியில் அதிமுகவின் அங்கீகாரம் சரிந்துள்ளது என்றும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி 70 முதல் 80 சதவீத சிறுபான்மையினர் வாக்குகளைப் பெற்று கூட்டணி யின் வெற்றியை உறுதி செய்யும் என்று சமூகவியலாளர்கள் கருதுகின்றனர் என தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தியா டுடே பத்திரிகையும் சிவோட்டர்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியாகியிருக்கிறது. திமுகவின் கூட்டணிக் கட்சிகள் இடம்பெற்றிருக்கும் இந்தியா கூட்டணி 45 சதவிகித ஆதரவோடு முன்னிலையில் இருக்கிறது என இந்தியா டுடே சி வோட்டர்ஸ் தெரிவித்திருக்கிறது. அதிமுக இடம்பெற்றிருக்கும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 33 சதவிகித ஆதரவுதான் இருக்கிறது. வித்தியாசம் 12% என்பதால் தொட முடியாத உயரத்தில் தி.மு.க. கூட்டணியை மக்கள் உயர்த்திப்பிடிக்கின்றனர்.



முதலமைச்சரின் தலைமையில் 2019 நாடாளுமன்றத் தேர்தல் தொடங்கி தொடர்ச்சியாக எல்லா தேர்தல்களிலும் வெற்றி பெறும் கூட்டணியாக திமுக அணி இருக்கிறது. 2026 தேர்தலிலும் திமுக வெல்லும். அதனை கருத்துக் கணிப்புகளும் உறுதி செய்கின்றன.

தமிழ்நாட்டு மக்களின் குறிப்பாக பெண்களின் நம்பிக்கையையும் பேராதரவையும் பெற்று அசைக்க முடியாத அரசாக விளங்குகிறது திராவிட மாடல் அரசு! திராவிட மாடல் 2.0 மீண்டும் அமைக்க தமிழ்நாட்டின் பெரும்பான்மை பெண்கள் முடிவெடுத்து விட்டார்கள்! தமிழ்நாட்டில் இருக்கும் மூன்று கோடிக்கும் மேற்பட்ட பெண்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்று 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக அடையப் போகும் வரலாற்று வெற்றியில் பெண்களுக்கு முக்கிய பங்கு இருக்கும்.

தமிழ்நாட்டுப் பெண்களின் உரிமைகளுக்காக அவர்களின் சமூக மேம்பாட்டிற்காக திராவிட மாடல் அரசு அக்கறையோடு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்டத்தில் ஏறக்குறைய 1.30 கோடி குடும்பத் தலைவிகள் பயன்பெற்று வருகின்றனர். அரசு நகர பேருந்துகளில் அனைத்துப் பெண்களுக்கும் ‘விடியல் பயணம்’ மூலம் உத்வேகத்தையும் பொருளாதார சேமிப்பையும் உறுதிப்படுத்தியிருப்பவர் முதலமைச்சர் அவர்கள். இதுவரை 800 கோடி பயணங்களுக்கும் மேல் பெண்களால் மேற்கொள்ளப்பட்டிருப்பதே இத்திட்டத்தை தமிழ்நாட்டுப் பெண்கள் எவ்வளவு தூரம் வரவேற்றிருக்கிறார்கள் என்பதற்குச் சான்று.

பெண்களின் முன்னேற்றத்திற்கான தடைகள் எங்கிருந்தாலும் அதை ஒழித்து, அவர்களது முன்னேற்றப்பாதையைச் செழுமைப்படுத்துவதற்காகப் பல்வேறு திட்டங்களைத் திராவிட மாடல் அரசு தீட்டியிருக்கிறது. புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் பெண்கள் கல்வி கற்க பொருளாதாரம் ஒரு தடையாக இருக்க முடியாது என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறது. இத்திட்டம் மூலம் இதுவரை 6.95 இலட்சம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாயை வழங்கி வருகிறது தமிழ்நாடு அரசு.

பெண்களின் திறன்களும் உழைப்பாற்றலும் படைப்பாற்றலும் கிராமங்களில் முடங்கி விடக் கூடாது அவர்கள் நகரங்களுக்கு வந்து, தங்களையும் உயர்த்தி தமிழ்நாட்டையும் உயர்த்த வேண்டும் எனும் நோக்கத்தோடு அதீத பாதுகாப்போடு உயர்தர தோழி விடுதிகளை அமைத்திருக்கிறது.

பணிக்குச் செல்லும் குடும்பப் பெண்கள் பள்ளிக்குச் செல்லும் தங்கள் குழந்தைகளுக்கு முறையான ஊட்டச்சத்துள்ள காலை உணவு கிடைக்காமல் போய்விடுகிறேதே என்றிருந்த கவலையைத் தீர்த்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைத் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு சுவையான சத்தான காலை உணவுத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். இத்திட்டத்தின் மூலம் 20 இலட்சம் மாணவர்கள் தினமும் பயன் பெறுகின்றனர்.

இன்றைக்கு பெண்களின் நலனிலும் வளர்ச்சியிலும் அக்கறை உள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பெண்களுக்குப் கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க 9 முதல் 14 வயதுடைய, சுமார் 3.39 இலட்சம் சிறுமிகளுக்கு விலையில்லா தடுப்பூசி போடும் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார் முதலமைச்சர் ஸ்டாலின். பெண்களின் வாழ்வாதாரத்தில் மட்டுமல்ல அவர்களின் ஆரோக்கியத்திலும் அக்கறை கொண்டு கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்தி கொண்டிருக்கிறது தி.மு.க. அரசு.

பெண்களை ஆதிக்கம் செய்ய நினைப்பவர்கள், துன்புறுத்த நினைப்ப வர்களை கடுமையாக தண்டிக்கத் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்பு (திருத்தச்) சட்டத்தை கொண்டு வந்தவரும் நமது முதலமைச்சர்தான்.

பெண்களை முன்னேற்று திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடுதான் இருக்கிறது. இது போன்றத் திட்டங்கள் பெண்கள் வாழ்வில் ஏற்படுத்திவரும் மறுமலர்ச்சியை கண்டு வயிற்றெரிச்சலில் திரிபவர்கள், உண்மை களை ஜீரணிக்க முடியா மல், அவதூறுகளை நாள்தோறும் அள்ளிவிட்டுக் கொண்டிருக்கிருக்கிறார்கள்.

இதனையெல்லாம் தமிழ்நாட்டுப் பெண்கள் பொருட்படுத்துவதில்லை. தங்களுக்காக உழைக்கின்ற, தங்களுக்காக திட்டங்களை உள்ளன்போடு, உயர்த்தும் நோக்கத்தோடு செயல்படுத்தும் திராவிட மாடல் அரசே தொடர வேண்டும் எனும் தமிழ்நாட்டின் பெரும்பான்மை பெண்கள் முடிவெடுத்து விட்டார்கள்.

45% என்பதே கூட மிகக் குறைவான கணக்குதான் என்பதை 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக அடையப் போகும் வரலாற்று வெற்றி நிரூபிக்கும். அதற்கு திமுக ஆட்சியில் பயன்பெறும் பெண்கள் தான் மகுடம் சூட்டு வார்கள்!

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

### ஊத்துக்குளி பேரூர்க் கழகப் பொருளாளர்

# கழக முன்னோடி சி.பி.செல்வராஜ் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.31

ஊத்துக்குளி பேரூர்க் கழகப் பொருளாளரும், கழக முன்னோடி சடையப்ப நாடார் அவர்களின் புதல்வரும் யு.எஸ். நவீன் குமார், யு.எஸ்.ரகுநாத் ஆகியோரின் தந்தையுமான சி.பி. செல்வராஜ் அவர்கள் 29.1.2026 வியாழக்கிழமை அன்று அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருகிறோம்.

தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் – முதல்வர் மு. க.ஸ்டாலின் அவர்கள் கழக முன்னோடி சி.பி.செல்வராஜ் அவர்களின் குடும்பத்தினருக்கும் கழகத் தோழர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

### வி.கே.புரம் நகரச் செயலாளர் கணேசன் தலைமை!

# நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் – எழுத்தாளர் சூர்யா சேவியர் பங்கேற்பு!

நெல்லை, ஜன.31–

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் விக்கிரமசிங்கபுரம் மூன்று விளக்கு திடல் வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன் தலைமையில் அம்பை நகரச் செயலாளர் பிரபாகரன் பாண்டியன், அம்பை கிழக்கு ஒன்றிய செயலாளர் பரணி சேகர், மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜெகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பிரபாகரன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியை மாணவரணி துணை அமைப்பாளர் சுப்பையா தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், தலைமைக் கழக பேச்சாளர் கல்லிடைகனல் பேச்சி, கழக இளம் பேச்சாளர் கந்த பரமேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர் எழுத்தாளர் சூர்யா சேவியர் எழுச்சிப்பேருரை ஆற்றி பேசியதாவது.

பிரதமர் மோடி தமிழகத்திற்கு வரும் போது திருக்குறள் மற்றும் அவ்வையார் பாடல்களை மேற்கோள் காட்டிப் பேசுகிறார். இதைப்பார்த்த இங்குள்ள சிலர் பிரதமர் தமிழ்பேசுகிறார் என்கின்றனர் “நாம் வீட்டில் வளர்க்கும் கோழிக்கு அன்பாகப் பெயரிட்டு,கையில் தூக்கி வைத்து இரை போடுவது அதன் மீதான பாசத்தால் அல்ல; என்றாவது ஒருநாள் அதை ‘பிரியாணி’ போடுவதற்காகத்தான். அதுபோலவே, தமிழர்கள் மீது மோடி திடீர் பாசம் காட்டுவதும், தமிழில் பேசுவதும் அவர்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று, இறுதியில் பிரியாணி போடுவதற்காகத்தான்.

திராவிட இயக்கம் என்பது வடக்கே இருந்து வருபவர்களுக்கு ஒரு எல்லைக்கல்லாக நின்று தடுத்துவருகிறது.திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மண், மொழி, சமூக நீதி, மதச் சார்பின்மை மற்றும் பெண்கள் விடுதலையைக் காக்கப் போராடும் இயக்கம்

“விஜய் கட்சி ஆட்சிக்கு வந்தால், இப்போது பெண்களுக்கு வழங்கப்படும் 1000 ரூபாய் உரிமைத் தொகையை நிறுத்திவிடுவோம் அல்லது பிடுங்கி விடுவோம் என்பது போல் அவர்கள் பேசுகிறார்கள். எங்களுக்கு அந்த 1000 ரூபாய் வேண்டாம், இலவச பேருந்து பயணம் வேண்டாம் என்று விஜய்யின் கட்சியில் பேசுகிறார்கள், மக்களின் நலத்திட்டங்களை பறிக்க நினைக்கும் இவர்கள் எப்படி மக்கள் நலன் பற்றி சித்திப்பார்கள். தமிழ்நாட்டை வடக்கிலிருந்து வந்த எவராலும் ஆள முடியவில்லை “மௌரியப் பேரரசு, குப்தப் பேரரசு, டெல்லி சுல்தான்கள், முகலாயர்கள் என யாராலும் தமிழ்நாட்டை வெல்ல முடியவில்லை. சேர, சோழ, பாண்டியர்கள் மட்டுமே இந்த மண்ணை ஆண்டனர்.

ஆனால் இன்று இரண்டு குஜராத்திகள் (மோடி, அமித் ஷா) தமிழ்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறார்கள். குஜராத்துக் காரனுக்கு தமிழ்நாட்டை அடகு வைக்கப் போகிறோமா என்பது தான் 2026 தேர்தலின் கேள்வி வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் என்பது வெறும் அரசியல் மாற்றத்திற்கான தேர்தல் அல்ல,அது தமிழ் மண்ணையும், தமிழர்களின் மானத்தையும் காப்பாற்றுவதற்கான போர். எனவே தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிப்பதே தமிழ் மண்ணைக் காப்பாற்றுவதற்கான வழி என கூறினார்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா, மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,மாவட்ட துணைச் செயலாளர்கள் தமயந்தி, தமிழ்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் அபூபக்கர், ரவிச்சந்திரன்,ஒன்றிய செயலாளர்கள் முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துகிருஷ்ணன், மு.செல்லத்துரை, சமுத்திரபாண்டியன், சிவக்குமார், மாரிவண்ணமுத்து, குமார், ஜெயக்குமார், மகேஷ் மாயவன், சிவன்பாண்டியன்,பொன்.செல்வன், களக்காடு நகர செயலாளர் மணி சூரியன், பேரூர் செயலாளர்கள் முத்து கணேசன், மனிஷாசெல்வராஜ், மணிகண்டன், வானுமாமலை, அழகேசன், லட்சுமணன், ஜெகதீசன், மாவட்ட கவுன்சிலர் சாலமன் டேவிட்,

மாவட்ட அணி அமைப்பாளர்கள் மகளிர் தொண்டரணி திவ்யா மணிகண்டன்,இலக்கிய அணி நெல்லை மணி,தகவல் தொழில் நுட்ப அணி பிரேம் ஆனந்த்,அயலக அணி பீர்முகம்மது,அமைப்புசாரா ஓட்டுனர் அணி பிரகாஷ்,ஆலடி எழில்வாணன் உள்பட கழக நிர்வாகிகள்,பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ராஜதுரை,நகர மாணவரணி அமைப்பாளர் விக்னேஷ் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.